குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.466/2025

அ.சா.3

2026–ம் ஆண்டு ஜுன் 29–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 3 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனிசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.39 மணி,

Accused A1)Sekar, A2)Selvi, A3)Sarath are present. Advocate Ms.Subashini present for Advocate Mr.Thiyagarajan for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் செல்லபிள்ளைகுட்டையில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகோதரர். அ.சா.2 எனது அம்மா. 1 ஆம் எதிரி எனது அப்பா பழனிசாமி என்பவரின் உடன்பிறந்த சகோதரர். 2 ஆம் எதிரி அவரது மனைவி, 3 ஆம் எதிரி அவரது மகன் ஆவர். எங்களுக்கிடையே நிலம் சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 17.06.2015 ஆம் தேதி செல்லபிள்ளைகுட்டையில் உள்ள எங்களது தோட்டத்தில் நானும், எனது சகோதரர் அ.சா.1 ஏழுமலை மற்றும் அ.சா.2 எனது அம்மா ஆகியோர் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் வந்தார்கள்.

2. அப்போது அ.சா.2 எனது அம்மா அவர்களிடம் ஏன் எங்களுக்கு சொந்தமான தென்னை மரத்தில் இருந்து மட்டைகளை வெட்டுனீர்கள் என்று கேட்டபோது, எதிரிகள் எங்களிடம் வாக்குவாதம் செய்தார்கள். நான் தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள கையெழுத்து செய்துள்ளேன். (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்படுகிறது**.) போலிசார் விசாரித்தார்கள்.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.29 17:41:06 +0530

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 17.06.2015 ஆம் தேதி மாலை 03.00 மணியளவில் நான் எங்களுக்கு சொந்தமான செல்லபிள்ளைகுட்டையில் உள்ள தோட்டத்தில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் அங்கு வந்து 1 ஆம் எதிரி அ.சா.2 ஐ பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், எதிரிகள் மூவரும் சேர்ந்து கையால் அ.சா.1, அ.சா.2 மற்றும் என்னை கையால் மாறிமாறி அடித்தார்கள் என்றும், 1 ஆம் எதிரி செங்கல்லால் அ.சா.1–ன் இடது கன்னத்தில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 ஐ பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாகவும் கூறிவிட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.41 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.06.29 17:41:09 +0530